# பாதுகாப்பு அமைச்சு
# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
# (NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணிப்பாளர் பதவி (தொழில்நுட்பம்) - HM 1-3 (01 பதவி)**

**(மனிதக் குடியேற்றத் திட்டமிடல் மற்றும் பயிற்சிப் பிரிவு)**

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பொறியியல் / விஞ்ஞானம் / தொழில்நுட்பவியலில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்புத் தகைமை (Master's) அல்லது இயைபுடைய நிறுவனத்தின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்.

**அல்லது**

பதவிக்குரித்தான சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்.

**பொதுவான நிபந்தனைகள்:**

**சம்பள அளவு** : HM 1-3 ரூபா (86,865 - 15x2,2,270 - 120,915)
**சம்பள நிலை** : ரூபா 86,865.00
**வயதெல்லை** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள்** :

- வாழ்க்கைச் செலவுப் படி
- 12% EPF உரித்தாகும் மற்றும் நிறுவனத்தினால் 3% ETF பங்களிப்பு செய்யப்படும்.
- மருத்துவ விடுமுறைக்கான பணம் மற்றும் அரச சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த போனஸ்
- மாதாந்த செயலாற்றுகை ஊக்குவிப்பு
- மருத்துவ மற்றும் ஆயுள் காப்புறுதி
- தொடர்பாடல் கொடுப்பனவுகள்
- தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு நிலையானதன் பிரகாரம் போக்குவரத்து வசதி உரித்தாகும்.
- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனத்தில் பணியில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் முழுமையான சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2025 மார்ச் 03ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**